**தலைப்பு 07 – நீதிச் சேவை ஆணைக்குழு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

நீதிச் சேவை ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் .

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே ஏல விற்பனை செய்யப்பட்டிருந்த பொருட்கள் மற்றும் உபகரணங்கள் உருப்படி 9 இன் கிரயம் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் நீக்கப்பட்டிருக்கவில்லை. | ஏல விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களின் கிரயம் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA-6) பாவனைக்குட்படுத்தப் படாததாக நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என அறியத்தருன்றேன். | சரியான பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 கட்டு நிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரிக்கு செலுத்தப்பட்டிருப்பினும் திறைசேரி குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 33,086 கட்டுநிதி மீதி, நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் வழிகாட்டி 05/2020 ஆம் இலக்கத்தின் 4.1 இன் பிரகாரம் காசுப் புத்தகத்தில் உள்ள ரூபா 33,086 கட்டுநிதி மீதி 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் திறைசேரிக்கு செலுத்தி காசுபுத்தகத்தின் மீதி சூனியமாக்கப்பட்டது. அதனால் உரிய தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேலும் எங்களிடம் கட்டுநிதி மீதியொன்று இல்லையென்று அவதானிக்கக் கூடியதாக உள்ளதோடு ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியங்களுக்கு இணங்கக் கூடிய வகையில் அந்த தொகை நிதி நிலைமைத் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி அச்சுப் பதிவின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் திறைசேரிக்கு செலுத்தப் பட்டிருந்த போதிலும் திறைசேரி குறிப்புக்களில் மீதி காட்டப் படுவதுடன் கணக்குகளில் காட்டப்பட வேண்டியதாக |

## 2. நீதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களுக்கான 2020 பாதீட்டு ஒதுக்கம் ரூபா 66,100,000 ஆக இருந்த போதும், அது நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 63,500,000 ஆக காட்டப்பட்டிருந்ததனால் அனைத்து மதிப்பிடப்பட்ட மீண்டெழும் ஒதுக்கம் ரூபா 2,600,000 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களின் கீழ் விசேட சட்டச்சேவை செலவுகளுக்கான ரூபா 2,600,000 பாதீட்டு ஒதுக்கம், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய நலன்கள் இறுதி ஒன்றிணைப்பில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. இருப்பினும் அந்த ஒதுக்கம் ACA-(2i) உள்ளடங்கலாக ஏனைய அனைத்து மாதிரியிலும் சரியாக உள்ளடக்கப்பட்டிருந்தது. ரூபா 2,600,000 ஆன விசேட | சரியான பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட வேண்டும். |

சட்டச் சேவை செலவுகளுக்கான அந்த ஒதுக்கம் சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களாக நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டுள்ள தொகைக்கு 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கத்திற்கு சமமானதாகும்.

## 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பணிகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடைமுறையொன்று காணப்படுவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1021 Vol I இலக்க மற்றும் 2017.07.18 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கான உள்ளக கணக்காய்வு அலகொன்றை நிறுவுவதற்காக பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் நீதிச் சேவை ஆணைக்குழு செயலாளர் அலுவலகத்தின் நடவடிக்கைகள் தற்காலிக கட்டிடமொன்றில் நடாத்தப்படுவதுடன் அங்கு போதுமான இட வசதிகள் இல்லாததன் காரணமாக உள்ளக கணக்காய்வு அலகு இதுவரை நிறுவப்படவில்லை. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2020/02 ஆம் இலக்க அரச நிதிச் | காசுப்பாய்ச்சல் கூற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படாமல் குறுக்குப் பதிவின் | அரச நிதிச் சுற்றுநிருபம் 02/2020 இன் 10.1 பந்தியின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தினால் | சுற்றுநிருப அறிவுரையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றுநிருபத்தின் 10.1 பந்தியின் கீழ் வரும் 06 ஆம் இலக்க வழிகாட்டல் | மூலம் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் நீக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. | வெளியிடப்பட்ட06 ஆம் இலக்க வழிகாட்டலின் 06 ஆம் இலக்க பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏசீஏ-சீ மாதிரி பத்திரத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய பந்தியில் காசுப்பாய்ச்சல் கூற்று ‘‘சாதாரண அடிப்படையில்’’ என குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனால் கருதப்படுவது யாது, என்பது தொடர்பாக தெளிவொன்றோ அல்லது வரைவிலக்கனமொன்றோ முன்வைக்கப்பட்டிக்க வில்லை. எவ்வாறாயினும், காசுப்பாய்ச்சல் கூற்றொன்று தயாரிப்பதன் மூல சித்தார்த்தம் யாதெனில் உண்மையாக நிறுவனத்திற்குள் வருகின்ற நிதிகள் மற்றும் உண்மையாக நிறுவனத்திலிருந்து வெளியேறும் நிதிகளை அடிப்படையாகக் கொண்டு அதை தயாரிப்பதேயாகும். ஆதன்போது பணத்தில் அல்லாத பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் நீக்கப்பட வேண்டும். (குறுக்குப் பதிவுகள், நாட்குறிப்பு பதிவுகள் ஆகியவற்றின் ஊடாக) தங்களால் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது கூட இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. | தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 2018/02 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்தின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு தொழில்பயிற்சி வேலைத் திட்டங்களை | 8 சனவரி 24 ஆந் திகதிய 2018/02 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு இணங்க தற்போது மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்கு மற்றும் வல்லமை மற்றும் | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள் ளப் பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. | தொழில்பயிற்சி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனத்திற்குள் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துள்ளதுடன், அதற்கு இணையாக ஏனைய நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. |

**2.4 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்ப்பனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் 03 வருடங்களுக்கு அதிகமான காலமாக ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 185,000 ஆன கடன் மீதியொன்று காணப்பட்டது. | இந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கான நிதி அமைச்சின் PFD/RED/CJR/2019/04 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் தாபனக் கோவையின் உரிய ஏற்பாட்டின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | நிலுவை கடன் மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,500,000 பெறுமதியான Jaguar வகையான மோட்டார் வாகனமொன்று 03 வருட காலத்திலிருந்து விளைவற்று காணப்பட்டது. | Jaguar மோட்டார் வாகனம் மூன்று சந்தர்ப்பங்களில் டெண்டர் கோரப்பட்டு விற்பனை செய்வதற்கு முயற்சித்த போதிலும் அது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மதிப்பிடப்பட்ட விலைக்கு விலை மனு கோரப்படவில்லை. அதனால் டெண்டர் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் அந்த வாகனத்தை திருத்தங்கள் மேற்கொண்டு பாவனைக்குட்படுத்துவது அல்லது மீண்டும் மதிப்பிடுதல் ஆகிய இரண்டில் மிகவும் பொருத்தமான நடைமுறையொன்றை பெற்றுக் | விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொள்ளுதல் தொடர்பாக பரிந்துரையை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய Covid தொற்று நிலைமையின் காரணமாக ஏற்பட்ட பயணத்தடை ஊரடங்குச் சட்டம் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடு காரணமாக இந்த நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தாமதமானது. எவ்வாறாயினும், அந்த வாகனத்தை மீண்டும் மதிப்பீடு செய்து விற்பனை செய்வது பொருத்தமானதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பரிசோதகர் ஒருவரினால் 2021.02.10 ஆம் திகதி தனது பரிந்துரையை வழங்கியுள்ளதுடன் தற்போது அது மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | |

## 3.2 முகாமைத்துவப் பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே ஆணைக்குழுவின் கட்டிடத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 5,000,000 ஒதுக்கீடு வழங்கப்பட்ட போதிலும் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படாததன் காரணமாக ஒதுக்கீடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிலிருந்து புனர்நிர்மாணங்கள் மேற்கொள்ளாததன் காரணமாக 03 வருடங்களுக்கு அதிக காலத்திலிருந்து உத்தியோகத்தர்கள் தற்காலிக கொள்கலன்களினால் | எமது அலுவலகத்திற்கு உரிய பழைய கட்டிடத்தை புனர்நிர்மாணிக்க மற்றும் அந்த வளாகத்தில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதன் கீழ் பொறியியல் விடயங்கள் தொடர்பாக மத்திய அறிவுரை விடயப் பிரிவின் (CECB) தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் திறந்த போட்டித் தன்மையான விலைமனுக் கோரலின் ஊடாக | ஒதுக்கீட்டுத் தொகைகள் உரிய விடயங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

தயாரிக்கப்பட்ட கட்டிடங்களில் கடமை நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரொருவரின் மூலமாக நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு 2020 மார்ச் மாதத்திலே அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் NP/GOV/PP/JUS/20/07 ஆம் இலக்க 2020/09/09 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக புதிய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக அந்த வருடத்திற்குள் அங்கீகாரம் பெற்றுத்தர முடியாததாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி பழைய கட்டிடத்தை புனர் நிர்மாணம் செய்வதற்காக தேவையான விபரமான மதிப்பீட்டை தயாரிக்கும் பொருட்டு ஊநுஊடீ நிறுவனத்திற்கு அறியத்தந்த போதிலும், நாட்டில் நிலவிய ஊழஎனை 19 தொற்று நிலைமையின் பொருட்டு நீதிச் சேவை ஆணைக்குழு செயலாளர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயம் என்ற காரணத்தினால் கட்டிடத்தின் புனர்நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாதுள்ளது. எவ்வாறாயினும், தற்போது கட்டிட புனர் நிர்மாண நடவடிக்கைகள் மற்றும் அதற்காக 2021 ஆம் ஆண்டிற்குள் எங்களுக்கு கிடைக்கப்பெற்ற ஒதுக்கம் நீதி அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன் நீதி அமைச்சின் ஊடாக அந்த வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அலுவலகத்தின் 16 பதவிகளின் 77 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 08 பதவிகளின் 24 உத்தியோகத்தர் மிகையாக காணப்பட்டது. | நீதிச்சேவை ஆணைக்குழு செயலாளர் அலுவலகத்திற்காக முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 117 ஆக காணப்பட்டதுடன், 2020.12.31 இல் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 64 ஆகும். இந்த உத்தியோகத்தர்களின் மூலமாக தற்போது வெற்றிடங்களாக காணப்படுகின்ற பதவிகளின் கடமை நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சேவை அவசியத்தன்மையின் பிரகாரம் ஒரு சில பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி உத்தியோகத்தர்கள் காணப்படுவதுடன் அந்த சேவையின் அவசியத்தன்மை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு பதவிகளுக்காக தேவையான ஊழியர்களின் எண்ணிக்கையை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஒட்டுமொத்த நீதி கட்டமைப்பின் மேற்பார்வை, செயற்பாடுகள் மற்றும் நிர்வாகம் மேற்கொள்ளப்படுகின்ற நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கு சொந்தமான அதன் செயலாளர் அலுவலகம் தற்காலிக கட்டிடமொன்றில் நடாத்தப்பட்டுக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விட மிகவும் குறைந்த ஊழியர் எண்ணிக்கையுடன் மற்றும் குறைந்த வசதிகளின் மத்தியில் | பதவியணியினர் முறையான வகையில் பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்பட்டாலும், பதவியணியினர் முறையான முகாமைத்துவத்தை மேற்கொண்டு கடமை நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதை இங்கு விஷேடமாக குறிப்பிடுகின்றேன். | |
| (ஆ) | கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் சம்பளம் வழங்கப்படும் அலுவலக உதவியாளர் ஒருவர் 2018 சனவரியிலிருந்து தற்காலிகமாக ஆணைக்குழுவின் சேவைக்கு இணைக்கப்பட்டிருந்தது. | அலுவலக ஊழியர் சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 21 ஆக காணப்பட்டாலும் உண்மையாக ஊழியர் எண்ணிக்கை 07 ஆகக் காணப்படுவதுடன் தற்காலிக பிரதியுபகாரமாக கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் சம்பளம் வழங்கப்படும் அலுவலக உதவியாளர் ஒருவரை 2018 சனவரி 16 திகதியில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நீதி அமைச்சின் ஊடாக அந்த ஊழியரை எங்களது நிறுவனத்திற்கு நிரந்தர இடமாற்றத்தை மேற்கொள்வதற்கு தேவையான கட்டங்களை மேற்கொள்வது 2020 வருடத்தில் நாட்டில் நிலவிய Covid-19 நிலைமையின் காரணமாக தாமதமானது. நாட்டில் நிலவுகின்ற கொவிட் 19 நிலைமை குறைவடைந்த பின்னர் அந்த ஊழியரை எங்களது நிறுவனத்திற்கு நிரந்தரமாக பெற்றுக் கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வெற்றிடங்களை பூரணப்படுத்து வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (இ) | இயங்கும் நிலையில் உள்ள 04 வாகனங்களுக்காக இரண்டு சாரதிகள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு சொந்தமான இயங்கும் நிலையில் 04 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் அரச நிதியை முறையாக முகாமைத்துவம் செய்து இரண்டு சாரதிகளின் மூலமாக உரிய வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதுடன், இந்த 04 வாகனங்களில் 03, மிகையாக வாகனங்கள் காணப்பட்ட திறைசேரி மற்றும் நீதி அமைச்சின் ஊடாக எங்களுக்கு பெற்றுத் | தேவையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள் வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

தரப்பட்டதாகும். அந்த வாகனங்கள் எங்களது நிறுவனத்தினால் அரச நிதியைச் செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டது அல்ல என்பதை அறியத் தருகின்றேன். மேலும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அலுவலகத்திற்கு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சாரதிகளின் எண்ணிக்கை 03ஆக காணப்படுவதுடன் தற்போது இரண்டு சாரதிகள் மாத்திரம் எங்களது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றனர். வேற்றிடமாகக் காணப்படும் சாரதிகளை ஆட்சேர்ப்பதிற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.